بسم الله الرحمن الرحيم　نحمده ونصلي على رسوله الكريم　وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 25

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

25 ஷவ்வால் 1441 ஹிஜ்ரி கமரி 18 இஹ்ஸான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
18 ஜூன் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِيْنَ يَاْكُلُوْنَ اَمْوَالَ الْيَتٰمٰى ظُلْمًا اِنَّمَا يَاْكُلُوْنَ فِىْ بُطُوْنِهِمْ نَارًا ؕ وَسَيَصْلَوْنَ سَعِيْرًا ⑪

அநாதைகளின் பொருள்களை அநியாயமாக விழுங்குவோர், நிச்சயமாகத் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கின்றனர். நிச்சயமாக அவர்கள் சுடர்விட்டெரியும் நெருப்பில் நுழைவர். (4:11)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நினைவில் கொள்ளுங்கள். மேலும் இதனை உண்மையாக கருதுங்கள். அதாவது ஒரு நாள் அல்லாஹ்விடம் செல்ல வேண்டியதுள்ளது. நாம் நல்ல நிலையில் இங்கிருந்து திரும்பிச் செல்வோம் என்றால் பிறகு நமக்கு வாழ்த்துக்கள் மற்றும் மகிழ்ச்சி இருக்கும். இல்லையென்றால், மிகவும் அபாயகரமான நிலையாக இருக்கும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

## உண்மையான நல்லொழுக்கம் மிகப்பெரிய அற்புதமாகும்

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா விதமான அற்புதங்களின் ஆற்றல்களை நிரூபிப்பதிலும் ஏனைய அனைத்து நபிமார்களை விட மேலோங்கி இருக்கின்றார்கள். எனினும் குறிப்பாக நல்லொழுக்க அற்புதத்தில் முதலிடத்தில் அன்னார் இருக்கின்றார்கள். இதற்கு உதாரணம் உலக வரலாறு எடுத்துக் கூறவும் முடியாது. எடுத்துக் காட்டவும் முடியாது.

ஒரு நபர் தீய ஒழுக்கங்களை விட்டு விட்டு நல்ல பண்புகளை மேற்கொள்வார் என்றால் அதுவே அவருக்கு அற்புதமாகும். உதாரணமாக, கடுமைகாட்டக்கூடிய, கோபம் கொள்ளக்கூடிய ஒருவர் தீய பழக்கங்களை விட்டு விட்டு மென்மையையும், மன்னிப்பையும் மேற்கொண்டால் அல்லது கஞ்சத்தனத்தை விட்டு விட்டு கொடை வள்ளல் தன்மையையும், பொறாமையை விட்டு விட்டு அனுதாபத்தையும் மேற்கொள்வார் என்றால் அதுவே அவருக்கு அற்புதமாகும். ஆக உங்களில் எவர் இவ்வாறு ஆக வேண்டும் என்று விரும்ப மாட்டார்?

ஆக ஒரு உயிருள்ள அற்புதம் என்னவென்றால், மனிதன் நல்லொழுக்க நிலைமைகளை சரி செய்ய வேண்டும். ஏனென்றால் இது எத்தகையதொரு அற்புதம் என்றால் அதன் தாக்கம் ஒருபோதும் வீணாகுவதில்லை. மாறாக அதன் நன்மை தொலை தூரம் வரை சென்றடைகின்றது.

ஆக ஒரு நம்பிக்கையாளர் படைத்தவன் மற்றும் படைப்பினங்களின் பார்வையில் அற்புதங்களை வெளிப்படுத்தக் கூடியவராக ஆக வேண்டும். சுகபோகங்களில் இருக்கக்கூடிய பலரையும் நாம் பார்த்துள்ளோம். அவர்கள் வியக்கத்தக்க எந்தவொரு அடையாளத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் அவர்கள் நல்லொழுக்க நிலைமைக்கு முன்னால் தமது தலையை சாய்த்து விடுகின்றனர். அவர்களுக்கு அதனை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி கிடைக்கவில்லை. பல மக்களின் வாழ்க்கை வரலாற்றில் இவ்விஷயத்தை பார்க்க முடிகின்றது. அவர்கள் நல்லொழுக்க அற்புதங்களைக் கண்டு உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## எனது கூற்றை வீணாக்காதீர்கள்

எனவே நான் மீண்டும் கூறுகின்றேன். எனது நண்பர்கள் இதனைக் கேட்க வேண்டும். அதாவது அவர்கள் எனது கூற்றை வீணாக்கக் கூடாது. மேலும் அதற்கு ஒரு கதை போன்ற வடிவத்தை கொடுக்கக் கூடாது. மாறாக, இந்த அனைத்து விஷயங்களையும் உண்மையான அனுதாபத்துடனும், உளப்பூர்வமாகவும் நான் கூறியுள்ளேன். மேலும் இது எனது இயல்பாகவே எனது ஆன்மாவில் இருக்கின்ற ஒன்றாகும். இதனை உளப்பூர்வமாக செவிமடுங்கள். மேலும் அதன்படி அமல் செய்யுங்கள். நினைவில் கொள்ளுங்கள். மேலும் இதனை உண்மையாக கருதுங்கள். அதாவது ஒரு நாள் அல்லாஹ்விடம் செல்ல வேண்டியதுள்ளது. நாம் நல்ல நிலையில் இங்கிருந்து திரும்பிச் செல்வோம் என்றால் பிறகு நமக்கு வாழ்த்துக்கள் மற்றும் மகிழ்ச்சி இருக்கும். இல்லையென்றால், மிகவும் அபாயகரமான நிலையாக இருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّهٗ مَنْ يَّاْتِ رَبَّهٗ مُجْرِمًا فَاِنَّ لَهٗ جَهَنَّمَ ؕ لَا يَمُوْتُ فِيْهَا وَلَا يَحْيٰى ⑦⑤

அதாவது நிச்சயமாக தம்முடைய இறைவனிடம் குற்றவாளியாக வருபவருக்குக் கிடைப்பது நரகம்தான். அவர் அதில் மரணமடைவதுமில்லை; வாழ்வதுமில்லை. (20:75)

இது எந்த அளவுக்கு தெளிவான கூற்றாக இருக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 122,123 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

O.A. NIJAM 99947 57172　V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஈதுல் ஃபித்ர் பேருரை

**ஈத் பெருநாளின் மகிழ்ச்சிக்குரிய தருணத்தில் முழு உலகிலுமுள்ள அஹ்மதிகளுக்கு ஈத் பெருநாள் வாழ்த்துக்கள்**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் உண்மையான மற்றும் மிகப்பெரிய ஈத் பெருநாள் தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குத்பா பேருரை**

**அஹ்மதிகள் உண்மையான ஈத் பெருநாளை அடைவதற்காக செயல் ரீதியிலான சீர்திருத்தங்களின் பக்கம் கவனமூட்டியவாறு பிரச்சாரத்தின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துமாறு கவனமூட்டல்**

**இறை வழியில் கைதானவர்கள், அஹ்மதிய்யத்திற்காக உயிர் தியாகம் செய்வர்களின் குடும்பங்கள், வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள், முபல்லிக்கள், அனைத்து அஹ்மதிகள் மற்றும் முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 05 ஜுன் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **05 ஆம் தேதி** ஆற்றிய **ஈதுல் ஃபித்ர் பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இன்றிலிருந்து ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஈத் (பெருநாள்) தொடர்பாக ஓர் உரை நிகழ்த்தினார்கள். அதில் கூறப்பட்ட கருத்துக்கள் இன்றும் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. அதனால் இன்றும் நான் அந்தக் குத்பாவிலிருந்து பயன் பெற்றவாறு ஈத் தொடர்பாக சில விஷயங்களைக் கூறுவேன்.

மனிதன் தனக்கு அதிகமான மகிழ்ச்சிகள் கிடைக்க வேண்டும் என்றும், அந்த மகிழ்ச்சி அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்றான். ஈத் என்பதற்கான பொருளும் மீண்டும் மீண்டும் கிடைக்கின்ற மகிழ்ச்சியே ஆகும். இமாம் ராகிப் அவர்கள் ஈத் என்பதற்கு மீண்டும் மீண்டும் கிடைக்கின்ற மகிழ்ச்சி என்றும், மார்க்கச் சொல் வழக்கில் இச்சொல் 'யவ்முல் ஃபித்ர்' மற்றும் 'யவ்முல் அழ்ஹா' என்றும் கூறப்படுகிறது. ஏனென்றால், மார்க்கச் சட்டத்தின் அடிப்படையில் இந்நாள் மகிழ்ச்சிக்குரியதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சி என்பது மீண்டும் மீண்டும் வரக்கூடிய ஒன்றாகும் என்றும் எழுதியுள்ளார்கள்.

(முஃப்ரதாத் இமாம் ராகிப் அவுத் என்ற சொல்லின் விளக்கம்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஈத் என்றால் என்ன? மகிழ்ச்சி என்றால் என்ன? என்பதை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: நாம் இதைச் சிந்தித்துப் பார்த்தோம் என்றால் அனைவரும் ஒன்று கூடுவது, ஒன்றிணைவது மற்றும் ஒன்று சேர்வதற்குப் பெயர்தான் மகிழ்ச்சி என்பதை அறிய முடிகின்றது. உலகில் எந்த அளவிற்கு மகிழ்ச்சிகள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் ஒன்று கூடுவதனாலேயே ஏற்படுகின்றது.

பொதுவாக, சமூக வாழ்க்கையிலும் ஒரு மனிதனுக்கு மக்கள் அனைவரும் ஒன்று கூடும்போதுதான் மகிழ்ச்சிக்குரிய தருணமாக இருக்கின்றது என்பதை நம்மால் காண முடிகின்றது. மேலும் அவன் அதற்காக பெரிய ஏற்பாடுகளைச் செய்து மக்களையும் ஒன்று திரட்டுகிறான். மனிதனுக்கு திருமணம் நடைபெறும்போதும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறான். குழந்தைகள் பிறந்தால் மகிழ்ச்சி அடைகின்றான். ஏனென்றால் திருமணத்திற்குப் பிறகு ஒரு புதிய ஆன்மா அவர்களுடன் இணைந்து அதன் மூலம் குடும்பத்தில் ஒரு புதிய வரவு அதிகரித்து விடுகிறது. உலகில் மக்கள் அதிகமாக ஒன்று கூடுவதும் மகிழ்ச்சியின் காரணமாகவே இருக்கின்றது.

உலகில் பொதுவாக மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கான நடைமுறை என்னவென்றால், அதிகமான மக்கள் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக ஒன்று கூடுவதே ஆகும். திருவிழாக்களில் மக்கள் ஒன்று கூடுவதும் அங்கு சென்று மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும். தனியாக யாருடனும் சேராமல் காடுகளில் சென்று தனிமையை ஏற்படுத்திக் கொண்ட ஒரு மனிதரிடம் நீ ஏன் இவ்வாறு செய்தாய்? எனக் கேட்டால், அதற்கு அவன் நான் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக அவ்வாறு செய்தேன் எனக் கூறியதாக ஒருபோதும் நான் கேட்டதில்லை.

இன்று எனக்கு பெருநாளாகும்; மகிழ்ச்சிக்குரிய நாளாகும். உலகிலுள்ள அனைத்து நாட்டிலும் சமுதாயத்திலும் பகுதியிலும் உள்ள மக்கள் பெருநாளை இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக ஒருவர் மற்றவரிடமிருந்து ஓடி மறைந்து ஒளிந்து தனிமையில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதில்லை. மாறாக, ஒவ்வொரு சமுதாயத்தின் பெருநாளும் அங்குள்ள மக்கள் அனைவரும் ஒன்று கூடி அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இருக்கின்றது.

எந்த மக்கள் தன்னுடைய துயரங்களையும் துன்பங்களையும் அதிகரிக்க விரும்புகிறார்களோ அவர்கள் பிறரிடமிருந்து தனிமைப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியே அவர்களின் நடைமுறையாகும். (Depression) மனச்சோர்வுடைய நோயாளிகளையும் நாம் பார்த்தோம் என்றால் பொதுவாக அவர்களின் நிலை எவ்வாறாக இருக்கிறது என்றால் தங்களுடைய துக்கத்தைப் போக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் சபைகளிலும் அமர்வார்கள்.

மக்களுடனும் கலந்துரையாடுவார்கள். மருத்துவரும், பொதுவாக தனிமையை விரும்பக்கூடிய நோயாளியிடம் மக்களிடையே பழகுங்கள்; வெளியே செல்லுங்கள்; சமூகத்தல் ஒன்றியிருங்கள் என்றே அறிவுரை செய்வார்கள்.

ஆக, துக்கத்தைத் துயரத்தை விரும்பக் கூடியவர்கள் தனிமையை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வீட்டிலேயே இருந்தாலும் தனியாகத்தான் இருப்பார்கள். வெளியே சென்றாலும் தனியாக ஒரு மூலையில் சென்று அமர்ந்து விடுவார்கள். இப்படிப்பட்ட மக்கள் தனிமையை விரும்பக்

கூடியவர்களாக இருப்பார்கள். அவர்களின் வீட்டில் ஏதாவது துயரம் நிகழ்ந்தாலோ அல்லது யாராவது மரணித்து விட்டாலோ அதன் காரணமாக அதிகமான துக்கமும் துயரமும் ஏற்பட்ட அந்த மனிதரை எவராவது மனிதாபிமான அடிப்படையில் விசாரிக்கச் சென்றால் அவர் என்னை தனிமையிலே விட்டு விடுங்கள். மேலும் என்னை விட்டு விலகிச் செல்லுங்கள் என்று அவரிடம் கூறுவார்.

தனிமையிலே தான் அவர்களுக்கு தங்களது துக்கத்தை வெளிப்படுத்துவதற்கான மற்றும் மனக்குறையை எளிதாக வெளியேறுவதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கிறது. சாதாரண மனிதர்களில் பல தன்மைகள் கொண்டவர்கள் உள்ளார்கள். மக்களுக்கு மத்தியில் தன்னுடைய துயரத்தை வெளிப்படுத்தாதவர்களும் உள்ளார்கள். அவர்கள் தங்களுடைய துயரத்தை தனிமையிலோ அல்லது மிகவும் நெருக்கமானவர்களுடனோ வெளிப்படுத்த விரும்புவார்கள்.

ஆனால், ஒருபோதும் இவ்வாறு நடந்ததில்லை. ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்து மக்கள் அவருடைய வீட்டில் கூடி இருக்கும் அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் என்னை தனிமையில் விட்டு விட்டு விலகிச் செல்லுங்கள். நீங்கள் அனைவரும் ஒன்று கூடியதனால் என்னுடைய உள்ளம் பதற்றம் அடைகிறது. நிம்மதியிழந்து காணப்படுகிறது என்று ஒருபோதும் அவர் கூறமாட்டார். மாறாக, அவர் சுயமே மக்களை அழைத்து ஒன்று திரட்டுவார். எந்த அளவுக்கு அதிகமான மக்கள் ஒன்று கூடுவார்களோ அந்த அளவுக்கு அவர் மகிழ்ச்சி அடைந்து அனைவரிடமும் மகிழ்ச்சியுடன் நடந்து கொள்வார். அதேபோன்று திருமணத்தில் அவன் அழைப்பை ஏற்று அதிக மக்களின் வருகையினால் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படும்.

ஆக, துக்கத்தை வெளிப்படுத்துவதற்கு தனிமையும், மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கு மக்கள் அனைவரும் ஒன்று கூடுவதும் விரும்பத்தக்கதாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் மனிதனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் அவன் அந்த மகிழ்ச்சியைப் பிறருடன் சேர்ந்து அதை வெளிப்படுத்த வேண்டும் என்பதை அவன் இயல்பிலேயே வைத்துள்ளான்.

ஆனால், இன்று உலகில் சில கோரிக்கைகளுக்காக போராட்டங்களும் கூட்டங்களும் நடைபெறுகின்றன. அவை அனைத்தும் மக்கள் துக்கங்களிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காகத்தான் நடைபெறுகிறது. ஆக, அவர்களின் நோக்கமும் அதிகமாக மகிழ்ச்சி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இருக்கின்றது. மகிழ்ச்சி மற்றும் அனைவரும் ஒன்று கூடுதல் என்ற இந்த இரண்டுமே ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் இயல்பிற்கேற்ப உள்ள ஒரு மார்க்கமாகும். அதனால்தான் பெருநாளுடைய சந்தர்ப்பத்தை மகிழ்ச்சிக்குரிய தருணமாக அமைத்துள்ளது. முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று கூட வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளது. ஓர் இடத்தின் அருகில் உள்ளவர்கள் மட்டும் ஒன்று கூட வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, அந்தப் பகுதியிலுள்ள அனைத்து மக்களும் பெருநாள் திடலில் ஒன்று கூடி பெருநாளின் மகிழ்ச்சியை அனுசரிக்க வேண்டும் என்று கட்டளை இடுகின்றது. ஆக, இந்தக் கண்ணோட்டத்தில் நாம் பார்த்தோம் என்றால் மகிழ்ச்சி என்பது உண்மையில் அனைவரும் ஒன்று கூடுவதற்கான பெயர்தான் என மிகத் தெளிவாக விளங்குகிறது. இதன் அடிப்படையில் அனைவரும் ஒன்று கூடுவதற்குப் பெயர்தான் ஈத் பெருநாள் ஆகும். மேலும், மிக அதிகமாக மக்கள் ஒன்று கூடினால் அது மிகப்பெரிய பெருநாளாகும்.

மிக அதிகமான மக்கள் ஒன்று கூடக்கூடிய அடித்தளம் எப்போது அமைக்கப்பட்டது? அதன் காரணமாக மிகப்பெரிய பெருநாளிற்கான சந்தர்ப்பம் எப்போது ஏற்பட்டது? அது எப்போது நிகழ்ந்தது என்றால் அல்லாஹ்வின் ஒரு நேசர் அனைத்து உலகங்களையும் நோக்கி இவ்வாறு கூறியபோது அது நிகழ்ந்தது.

قُلۡ یٰۤاَیُّهَا النَّاسُ اِنِّیۡ رَسُوۡلُ اللّٰهِ اِلَیۡکُمۡ جَمِیۡعًا

நீர் கூறுவீராக: மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்.'' (7:159)

உலகம் சிறிய சிறிய பெருநாட்களை அதிகமாகக் கண்டுள்ளது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்திலும் பெருநாள் நிகழ்ந்தது. ஹஸ்ரத் தாவூது (அலை) அவர்களின் காலத்திலும் பெருநாள் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் அனைத்து நபிமார்களின் காலத்திலும் பெருநாட்கள் நிகழ்ந்தன. ஆனால் இந்த அனைத்துப் பெருநாட்களும் அந்தந்த நபிமார்கள் பிறந்த பகுதியிலோ அல்லது அவர்கள் அனுப்பப்பட்ட சமுதாயத்திலோ நிகழ்ந்ததாகும். எனவே இவை அனைத்தும் சிறிய சிறிய பெருநாட்கள் ஆகும்.

ஆனால், ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தோன்றியது முதல் உலகில் ஏதாவது பெரிய பெருநாள் நடந்தது என்றால் அது எல்லாம் வல்ல அல்லாஹ், தனது மிகவும் அன்பிற்குரிய ஒருவரிடம் உன் மூலமாக அனைத்து உல(க மக்களையும்)கையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டுமாறு கூறியதுபோது நடந்த நிகழ்வாகவே இருக்க முடியும். மேலும் எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய சிறப்பான போதனையின் மூலம் அனைத்து உலகையும் ஒரே இடத்தில் ஒன்று கூடுவதற்கான கட்டளையிடப்பட்ட அந்த பெருநாளே பெரிய பெருநாளாக இருந்தது. தன்னுடைய அன்பிற்குரிய நேசரின் மூலமாக அனைத்து உலகையும் அவருடைய கையில் இணையும்படி கட்டளையிட்டான்.

அதில் இந்தப் பகுதி, இந்த நாடு, இந்த சமுதாயம் என்ற எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. எகிப்தியராகவோ, அரேபியராகவோ, ஐரோப்பியராகவோ, அமெரிக்கராகவோ, தீவுகளைச் சார்ந்தவர்களாகவோ யாராகவும் எவராகவும் இருந்தாலும் சரியே, அவர்கள் அனைவரும் ஒன்று கூடலாம் எனக் கட்டளையிட்டான். ஏனென்றால், அப்போது நான் 'என்னுடைய முத்துக்களைப் பன்றிகளுக்கு முன்னால் இடமாட்டேன் என்றும் என்னுடைய அப்பத்தை நாய்களுக்கு முன்னால் எறிய மாட்டேன்' என்றும் கூற முடியாது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றிய காலத்திலும் பெருநாள் கொண்டாடப்பட்டது. ஆனால் அந்தப் பெருநாள் அவருடைய சமுதாய மக்களுக்காக மட்டுமாக இருந்தது. அவர் பிற சமுதாய மக்களுக்கு உணவு அளித்தால் பிறகு தன் சமுதாய மக்கள் எதை உண்பார்கள்? அவர்களுடைய பெருநாள் எவ்வாறு நடைபெறும்? இதனால்தான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள், 'நான் காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் சமுதாயத்தைத் தவிர வேறு எவருக்காகவும் அனுப்பப்படவில்லை' எனக் கூறினார். ஆக,

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள். மேலும் உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் நீங்கள் தெரிந்து கொண்டே நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள். (8:28)

Faizal Hameed Ilahi, Tittacherry

அவர்களின் வருகையானது பனீ இஸ்ராயீல் சமுதாயத்திற்கு மட்டுமே பெருநாளாக இருந்தது. ஆனால் அல்லாஹ் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எப்படிப்பட்ட கருவூலங்களுடன் அனுப்பினான் என்றால், அதிலிருந்து எவ்வளவு செலவு செய்தாலும் அதில் குறைவு ஏற்படாது. இதன் காரணமாகத்தான் எல்லாம் வல்ல இறைவன் அன்னாரிடம், உன்னிடம் எதைக் கேட்டாலும் கொடு. உலகத்தையே அழைத்து, வாருங்கள்! உங்களுக்கு எந்தப் பொருளின் தேவை இருக்கிறதோ நான் அதை உங்களுக்குத் தருகின்றேன் எனக் கூறுமாறு கூறியுள்ளான்.

எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி இவ்வாறு கூறினான்:

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

“மேலும் உமது இறைவனது பேரருளைப் பறைசாற்றுவீராக.” (93:12)

அதன் மூலம் அந்தப் பேரருளிலிருந்து அவர்களும் பயன் பெறட்டும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் ஒரு பெண் வந்து உணவு கேட்டதற்கு அவர், அவளை நோக்கி, ‘பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுவது நல்லதல்ல’ என்றார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் உன்னுடைய பணி என்னவென்றால், உன்னிடம் எவர் வந்து எதைக் கேட்டாலும் அவருக்குக் கண்டிப்பாக நீ கொடு எனக் கட்டளையிட்டான். وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ “மேலும் உமது உதவியைக் கோருபவரை நீர் கடிந்து கொள்ளாதிருப்பீராக.” (93:11) மேலும் அவர்களுக்கு கண்டிப்பாக நீ கொடுப்பாயாக.

மேலே கூறியதுபோல உமது இறைவனது பேரருளைப் பறைசாற்றுவீராக என்பதற்கேற்ப மக்களை சுயமே அழைத்து இந்த அருட்கொடையை வழங்குவீராக. மேலும் இவ்வாறு அறிவிப்பு செய்யுமாறு இறைவன் கட்டளையிட்டான். இறைவன் எனக்கு இந்த அருட்கொடைகளை வழங்கியுள்ளான். வாருங்கள்! நீங்களும் இந்த அருட்கொடையிலிருந்து பயன் பெறுங்கள்.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிற நபிமார்களை விட இந்தச் சிறப்புத் தன்மைகள் இருந்தது. அதாவது முந்தைய நபிமார்களிடம், பிற சமுதாயத்திலிருந்து தேவை உடையவர்கள் எவராவது வந்து கேட்டால், எங்களிடம் இருப்பவை எங்களுடைய சமுதாயத்திற்காக மட்டுமே உள்ளது. உங்களுக்கு நாங்கள் எதுவும் கொடுக்க முடியாது எனக் கூறப்பட்டு வந்தது.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கருவூலம் தொடர்பாக, உமது உதவியைக் கோருபவரை நீர் கடிந்து கொள்ளாதிருப்பீராக என்று மட்டும் கூறவில்லை. மாறாக, தேவை உடையவர்களின் வீடு வீடாகச் சென்று அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. அன்னார் ஆன்மீகக் கருவூலங்களையும் வீடு விடாகச் சென்று கொடுத்தார்கள். பௌதீகக் கருவூலங்களையும் வீடு வீடாகச் சென்று கொடுத்தார்கள். மாறாக, இறுதி நாள் வரை பிரித்துக் கொடுப்பதற்காக ஆன்மீகக் கருவூலங்களை விட்டுச் சென்றுள்ளார்கள்.

ஆக, உறுதியாக அன்னாரின் வருகையானது எல்லாவற்றையும் விட மிகப்பெரிய பெருநாளாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் மூலம் நேர்வழி முழுமை பெற்றது; ஷரீஅத் முழுமை அடைந்தது. மேலும் அன்னார் ‘காத்தமுன் நபிய்யீன்’ என்ற உயர்ந்த அந்தஸ்துடன் உலகிற்கு அனுப்பப்பட்டார்கள்.

மற்றொரு பெருநாள் எதுவாக இருந்தது? என்று சொன்னால், எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியாராக தாசராக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பி, பிரச்சாரத்தை முழுமைப்படுத்துதல் மற்றும் மார்க்கத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான பொறுப்பை சுயமே ஏற்றுக் கொண்டான்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி சுயமே பொறுப்பேற்றுக் கொண்ட பின் அந்த நாளும் வந்தது.

هُوَ الَّذِیْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰی وَدِیْنِ الْحَقِّ لِیُظْهِرَهٗ عَلَی الدِّیْنِ كُلِّهٖ

“அவனே தன்னுடைய தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் (ஏனைய) எல்லாச் சமயங்களின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான்.” (9:33)

இந்த வசனத்தில் கூறியதற்கேற்ப செயல்பட வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இஸ்லாத்தின் கட்டளைகள் முழுமை பெற்றது. அன்னாரின் வருகையின்போது உலகிற்கு இவ்வாறு கூறப்பட்டது. தற்போது எப்படிப்பட்ட நபி அனுப்பப்பட்டுள்ளார் என்றால் அவரிடத்தில் மிகுந்த மற்றும் பரந்த கருவூலங்களும் உள்ளன. நீங்கள் அவரிடம் வந்து உங்களுக்கு தேவையானதை எடுத்துச் செல்லுங்கள்.

(குத்பாத்தே மஹ்மூது பாகம் 1 பக்கம் 27–30 குத்பாத்தே ஈதைன் 2 ஆகஸ்டு 1916)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்தியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

“எல்லாம் வல்ல இறைவன் நம்முடைய எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலகில் எதற்காக அனுப்பினான் என்றால், அன்னாரின் மூலமாக அனைத்து மனித குலத்திற்காகவும் அருளப்பட்ட திருக்குர்ஆனின் போதனையின் மூலம் உலகிலுள்ள அனைத்து சமுதாயங்களையும் ஒரே சமுதாயமாக உருவாக்குவதற்காகவும், மேலும் எவ்வாறு அந்த இறைவனுக்கு இணை இல்லையோ அவன் ஒருவனாகவே இருக்கின்றானோ அதேபோன்று இந்த மக்களிடையேயும் அப்படிப்பட்ட ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்க விரும்பினான். அதன் மூலம் அந்த மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய இறைவனை நினைவு கூர்ந்து அவனுடைய ஏகத்துவத்திற்குப் சாட்சி பகர வேண்டும்.

மேலும், ஆரம்பக் காலகட்டத்தில் நிகழ்ந்த முன்னவர்களின் சமுதாய ஒருமைப்பாடு மற்றும் பின்னவர்களின் சமுதாய

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அவர் (அல்லாஹ்வின் தூதர்) உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் நீங்கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் பதில் அளியுங்கள். அல்லாஹ் மனிதனுக்கும் அவனுடைய உள்ளத்திற்குமிடையில் சூழ்ந்திருக்கின்றான் என்பதையும் நீங்கள் (உயிர்ப்பிக்கப்பட்டு) அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள் என்பதனையும் தெரிந்து கொள்ளுங்கள். (8:25)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

ஒருமைப்பாட்டிற்கான அடித்தளம் இறுதிக் காலத்தில் இடப்பட்டுள்ளது. இதற்கான திட்டத்தை எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பிய காலத்திலேயே தீட்டி விட்டான். இந்த இருவிதமான ஒருமைப்பாடுகளும் ஈடிணையில்லாத ஒரே இறைவனின் இருப்பிற்கு இரட்டிப்பு சாட்சி பகர்கின்றன. ஏனென்றால், அவன் ஒருவனே. அதனால் தன்னுடைய அனைத்து ஆன்மீக மற்றும் பௌதீக அமைப்பிலும் அவன் ஒருமைப்பாட்டை விரும்புகின்றேன்.

மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் காலம் கியாமத் வரை விரிவடைந்து கொண்டே செல்லும். அது நீடித்துக் கொண்டே இருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய வாழ்நாளிலேயே சமுதாய ஒருமைப்பாடு பூர்த்தி பெற வேண்டும் என்பதை விரும்பவில்லை. இந்த நிலையானது அன்னாரின் காலம் முற்றுப் பெறுவதற்கான சான்றைப் பகர்கின்றது. அதாவது அன்னாருடைய காலக்கட்டம் அங்கேயே முற்றுப் பெற்று விட்டது என்ற ஐயம் தோன்றியது.

ஆனால், அன்னாரின் இறுதிப் பணியானது அன்னாரின் காலக்கட்டத்திலேயே முடிவை எட்டி விட்டது. அதனால்தான் இறைவன் அனைத்து சமுதாயங்களும் ஒரே சமுதாயமாகவும் ஒரே மார்க்கமாகவும் ஆகிவிட வேண்டும் என்ற இந்தப் பணியை கியாமத் அருகிலுள்ள காலமாகிய முஹம்மதிய காலத்தின் இறுதிப் பகுதியில் வைத்துள்ளான். மேலும் அதை முழுமைப்படுத்துவதற்காக இதே உம்மத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயருடைய ஓர் உதவியாளரை நியமித்தான். மேலும் அன்னாரின் பெயரே 'காத்தமுல் குலஃபா' (கலீஃபாக்களில் சிறந்தவர்) ஆகும்.

ஆக, முஹம்மதிய காலத்தின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அதன் இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இருக்கிறார்கள். இந்த மஸீஹ் மவ்வூது பிறக்காதவரை உலகத் தொடர்புகள் துண்டிக்கப்படாமல் இருப்பது அவசியமானதாகும். ஏனென்றால் சமுதாய ஒருமைப்பாட்டிற்கு தொண்டு புரிவது அந்த நபியின் உதவியாளரின் காலக்கட்டத்தைச் சார்ந்ததாக இருக்கின்றது. இதன் பக்கமே திருக்குர்ஆனின் இந்த வசனம் சுட்டிக் காட்டுகின்றது.

هُوَ الَّذِىۡۤ اَرۡسَلَ رَسُوۡلَهٗ بِالۡهُدٰى وَدِيۡنِ الۡحَقِّ لِيُظۡهِرَهٗ عَلَى الدِّيۡنِ كُلِّهٖ وَلَوۡ كَرِهَ الۡمُشۡرِكُوۡنَ ۝۱۰

"அவனே தனது தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும், இதனை அவன் எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். (இறைவனுக்கு) இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே." (61:10)

அதாவது ஓர் உலகளாவிய வெற்றி அவருக்குக் கிடைக்க வேண்டும். அந்த உலகளாவிய வெற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வெளிப்படவில்லை. மேலும், இறைவனின் முன்னறிவிப்பில் எந்தவொரு மாற்றத்தையும், எந்தவொரு வேறுபாட்டையும் அல்லது பலவீனத்தையும் ஒருபோதும் காண முடியாது. எனவே, இந்த வசனத்தின் அடிப்படையில் நமக்கு முன்னால் சென்ற அனைத்து முன்னோர்களின் ஒருமித்த கருத்து என்னவென்றால், இந்த உலகளாவிய வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில்தான் வெளிப்படும் என்பதாகும்."

(சஷ்மயே மஃரிஃபத். ரூஹானி கஸாயீன் தொகுதி 23 பக்கம் 90–91)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்தத் தூதுச் செய்தி மற்றும் பணியை முழுமை அடையச் செய்வதற்காக அரியணையை அசைக்கக்கூடிய அன்னாரின் உறுதிவாய்ந்த துஆவின் விளைவாக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றத்தில் அன்னாருக்கு உண்மையான நேசரை வழங்கியுள்ளான். ஆகையால் தன் எஜமானரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய காரணத்தினால் அல்லாஹ் இந்த உண்மை நேசரையும் இவ்வாறு அறிவிக்குமாறு கூறினான்:

قُلۡ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّىۡ رَسُوۡلُ اللّٰهِ اِلَيۡكُمۡ جَمِيۡعَا ۨ

"நீர் கூறுவீராக: மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்" (7:159)

(மஸீஹே மூஸா) மூஸா (அலை) அவர்களின் உம்மத்தில் தோன்றிய ஈஸா (அலை) அவர்களோ உதவி என்று கேட்டு வந்தவர்களைத் துரத்தி விட்டார்கள். ஆனால் (முஹம்மதிய மஸீஹ்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் அன்னாரின் அடிமையாகத் தோன்றிய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பரந்த உணவு விரிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில் அமர்வதிலிருந்து எவரும் தடுக்கப்படவில்லை. மாறாக, மக்களை அழைத்து அழைத்து இந்த உணவு விரிப்பிலிருந்து உண்ணுங்கள் என்று கூறப்படுகிறது.

ஒவ்வொரு புதிய ஆன்மாவும் இந்த உணவு விரிப்பில் அமர்ந்து நம்முடன் இணைகின்ற காரணத்தினால் அந்தத் தருணமானது நமக்குப் பெருநாளாகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும் அமைகின்றது. இது மார்க்கக் கட்டளையின் அடிப்படையில் ஒன்று கூடுவதற்கான பெருநாள் ஆகும். மேலும் அனைத்து மக்களும் நடைமுறை வாழ்வில் ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்று கூடும்போது அதன் விளைவாக நடைபெறும் பெருநாளே உண்மையான பெருநாளாகவும் மிகப்பெரிய பெருநாளாகவும் விளங்கும். அப்படிப்பட்ட ஒரு பெருநாளைக் கொண்டாடுவதற்கான பொறுப்பை இக்காலத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் நம் மீது சுமத்தியுள்ளான்.

இக்காலத்தில் உண்மையான பெருநாளைக் கொண்டாடுவதற்காகப் பொறுப்பை அல்லாஹ் நம் மீது சுமத்தியுள்ளான் என்றபோது நாம் எவ்வாறு இந்தப் பணியில் நல்ல முடிவை எட்ட முடியும் என்று நாமும் நம்முடைய நிலைமைகளை ஆய்வு செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்காக வழங்கிய அந்தச் செயல்மறைத் திட்டங்களின்படி செயல்பட்டு அந்த உண்மையான பெருநாளைக் கொண்டாடுவதற்காகக் காரணிகளை விரைவாக உருவாக்க வேண்டும். அப்போதுதான் அல்லாஹ் இக்காலத்தில் நம் மீது சுமத்திய இந்தப் பணியை நாம் செய்து முடிக்க முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய அறிவுரைகளிலிருந்து சிலவற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள். நீங்கள் (அவருடைய கட்டளைகளை) செவியேற்றுக் கொண்ட நிலையில் அவரை விட்டும் முகம் திருப்பிக் கொள்ளாதீர்கள். தாங்கள் செவியேற்காமலேயே நாங்கள் செவியேற்றோம் எனக்கூறியவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். (8:21,22)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

அன்னார் கூறுகின்றார்கள்: ''இறைவன் மீதுள்ள நேசம் எந்தவொரு காரணத்திற்காகவும் இல்லாமல் இயல்பாகவே இருக்க வேண்டும். நம்முடைய இயல்பு எவ்வாறாக இருக்க வேண்டும் என்றால் நாம் அல்லாஹ்வை நேசிப்பதில் எந்தவொரு நோக்கமும் இருக்கக் கூடாது; உளப்பூர்வமாக நேசிக்க வேண்டும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 96)

''திருக்குர்ஆனை அதிகமாக ஓதி வாருங்கள். தன்னுடைய செயல்களை அதற்கேற்ப அமைத்து உண்மையான செயல் வடிவத்தின் மூலம் இஸ்லாத்தின் சிறப்புத் தன்மையை உலகின் மீது வெளிப்படுத்துங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 155)

''தப்லீகிற்கு (பிரச்சாரத்திற்கு) இறையச்சமும் அவசியமாகும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 413)

''எனவே, திருக்குர்ஆனின் போதனையின்படி செயல்பட்டால்தான் (தக்வா) இறையச்சத்தையும் செயல் வடிவிலான சிறப்புத் தன்மைகளையும் உருவாக்க முடியும். மேலும் அல்லாஹ்வின் உரிமையையும் படைப்பினங்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளையும் முழுமையான முறையில் செலுத்துவதற்கான முயற்சி செய்யவும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 265)

இவை இரண்டும் உங்கள் கடமைகளில் உள்ளதாகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

''ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் ஏகத்துவத்தை ஒப்புக் கொள்ளுதல், அல்லாஹ்வுடனான தொடர்பை மேற்கொள்ளுதல், இறைவனை நினைவு கூர்தல் மற்றும் தன்னுடைய சகோதரரின் உரிமையை நிறைவேற்றுதல் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க நற்பண்புகளை மேற்கொள்ள வேண்டும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 95)

''உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்யுங்கள். இறைவனை உண்மை மற்றும் நம்பகத் தன்மையைக் கொண்டு திருப்தி அடையச் செய்யுங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 191)

''தொழுகையை முறைப்படி தொழுது வாருங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 263)

''தஹஜ்ஜுத்தையும் முறைப்படி தொழுது வாருங்கள். நஃபில்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 245)

''தன்னுடைய மார்க்க ஞானத்தை அதிகரிக்கவும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 275)

''இறையச்சத்தில் முன்னேறிச் செல்லுங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 435)

''உரிமைக்கு எப்போதும் குரல் கொடுங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 115)

''உண்மையில் நிலைத்து நில்லுங்கள். உங்களிடமிருந்து ஒருபோதும் பொய் வெளிப்பட வேண்டாம். இறை மறுப்பாளர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் அவரை மறுக்கின்றவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 74)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: ''புதிதாக ஜமாஅத்தில் இணைந்தவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். புதிதாக உங்களில் இணைந்தவர்களில் புதிய ஆன்மா உருவாகியிருக்கும். இந்த ஜமாஅத்தை அதிகரிக்கக் கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள். அவர்களிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய செயல்களினால் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குவதற்கான முயற்சி செய்யவும். நல்ல முறையில் நடந்து கொள்ளவும் வேண்டும். அத்துடன் எப்படிப்பட்ட செயல் வடிவிலான முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும் என்றால் உங்களைப் பார்த்து அவர்களிடம் தர்பிய்யத் நடைபெற வேண்டும்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 349)

நான் கூறிய இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் நமக்கு வழங்கிய ஒரு சில அறிவுரைகளின் சுருக்கமாகும். ஆக, மிகவும் கவனமாகவும் கடினமான உழைப்புடனும் நாம் அன்னாரின் பைஅத்தின் உரிமையைச் செலுத்த வேண்டும். மேலும் நம் மீது சுமத்தப்பட்ட பணியை முழுமை அடையச் செய்வது அவசியமானதாகும். அனைத்து உலகிற்காகவும் ஒரு நபியை அனுப்பியது இறைவனின் பணிதான். உலகத்திற்கான முழுமையான நிறைவான போதனையை (இறை சட்டத்தை) அனுப்பியதும் இறைவனின் பணிதான்.

அதன் பிறகு மார்க்கப் பிரச்சாரம் மற்றும் அதன் வளர்ச்சியை முழுமைப்படுத்துவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்புவதும் இறைவனின் பணியாகும். ஆனால் பெருநாள் கொண்டாடுவதை அல்லாஹ் நம்மீது ஒப்படைத்து விட்டான். இதனால் ஜமாஅத் மக்களாகிய நாம் எவ்வாறு அனைத்து மக்களையும் ஒன்று கூட்டுவதன் மூலம் உண்மையான மகிழ்ச்சி தரக்கூடிய பெருநாளை எவ்வாறு கொண்டாட முடியும்? என்று சிந்திக்கவும் கவனம் செலுத்தவும் வேண்டும். ஏனென்றால் அது உண்மையான மற்றும் மகிழ்ச்சிக்குரிய பெருநாளாக இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஈஸா (அலை) அவர்கள் இவ்வாறு ஒரு முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே! உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக. உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போன்று மண்ணுலகிலும் நிறைவேறுக. இதிலிருந்து இறைவனது ஆட்சியானது பூமியில் இல்லை என்றுதான் தோன்றும்.

மாறாக, இதுவும் பைபிளில்தான் எழுதப்பட்டுள்ளது. அதாவது இறைவனின் ஆட்சி எவ்வாறு விண்ணில் அமைந்துள்ளதோ அதேபோன்று பூமியிலும் அமைந்துள்ளது. இந்த இரண்டு ஆதாரமும் மத்தேயுவில் உள்ளதாகும். இந்த வசனங்களிலிருந்து நாம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் ஆட்சி பூமியில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் எதிர்ப்பவர், அல்லாஹ் மிகக்கடினமான தண்டனை அளிப்பவனாவான் (என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்). (8:14)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

நிலைபெறவில்லை எனக் கருதினார்கள் எனக் கூற முடியாது. மாறாக, இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை தொடர்பான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் செய்த ஒரு துஆ ஆகும். எவ்வாறு அந்த இறைவன் ஏகனாக இருக்கின்றானோ ஒருவனாக இருக்கின்றானோ அதேபோன்று அனைத்து உலகத்தையும் ஒரே இடத்தில் ஒன்று திரட்டக்கூடிய ஒரு நபி வர வேண்டும்.

மேலும் இதில் இதன் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது எவ்வாறு விண்ணில் அதன் ஒவ்வொரு பகுதியிலும் வானவர்கள் (தஸ்பீஹ்) இறைவனின் தூய்மையைப் போற்றுதல் மற்றும் (தஹ்மீது) இறைவனைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ அதேபோன்று பூமியில் மூலை முடுக்கெல்லாம் இறைவனை புகழக்கூடிய மற்றும் அவனது பரிசுத்தத்தைப் போற்றக்கூடியவர்கள் தோன்ற வேண்டும் என்பதாகும்.

ஆக, உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் அப்படிப்பட்ட மக்களை உருவாக்குவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தின் கடமையாகும். ஆனால் நாம் இறைவனை நினைவு கூர்தல், அவனுடைய தூய்மையை எடுத்துரைத்தல் மற்றும் நம்முடைய செயல்பாடுகள் ஆகியவை இந்த போதனைக்கு ஏற்ப இருக்கின்றனவா என்று நம்மை நாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் கொண்டாடுகின்ற இந்தப் பெருநாட்களுக்காக நாம் மிகப்பெரிய ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஆடைகளிலிருந்து உணவு வகைகள் வரை நம்முடைய தகுதிக்கேற்ப அனைத்து விதமான ஏற்பாடுகளையும் செய்வதற்கு முயற்சி செய்கின்றோம். மேலும் இந்த அனைத்துச் செலவுகளும் நாம் சுயமே இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதற்காக செய்யப்படுவதில்லை.

மாறாக, அனைவரும் ஒன்று கூடுகின்ற மகிழ்ச்சியில் அதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றோம். மேலும் நிச்சயமாக அல்லாஹ் மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள் என்று கூறியதனால்தான் நாம் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றோம். இதுவும் அல்லாஹ்வின் பல கட்டளைகளின் ஒரு கட்டளையாகும். எவ்வாறிருந்தபோதும் இதிலிருந்து உலகப் பயன் எதுவும் நமக்குக் கிடைக்கப் போவதில்லை. மாறாக ஆன்மீகப் பயன் நமக்குக் கிடைக்கும். மேலும் அது உறுதியாகக் கிடைக்கக் கூடியதே.

நாம் நல்ல எண்ணத்தோடு அல்லாஹ் ரமலானுக்குப் பிறகு பெருநாளைக் கொண்டாடுங்கள். மேலும், இன்றைய நாளில் மகிழ்ச்சியாக இருங்கள். உண்ணுங்கள்; பருகுங்கள் என்று கூறிய காரணத்தினால் நாம் பெருநாளைக் கொண்டாடுவோம் என்றால் உறுதியாக நமக்கு ஆன்மீகப் பயன் கிடைக்கும். இதை விட அதிக இன்பம் மற்றும் மகிழ்ச்சியைப் பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்தவாறு அல்லாஹ் அனைத்து உலகத்தையும் ஒரே கையில் ஒன்றிணைப்பதற்காக ஒரு தூதரை அனுப்பினான்.

இதன் பக்கம் நம்மில் ஒவ்வொருவருக்கும் எந்த அளவுக்கு கவனம் ஏற்பட வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் ஏற்படவில்லை. அந்தத் தூதரின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் மற்றும் அதைப் பரப்புவதில் எந்த அளவுக்கு முயற்சி செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்யப்படவில்லை. இந்தக் கூட்டத்தை அதிகரிப்பதில் நாம் எந்த அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளோமோ அந்த அளவுக்குதான் அதில் நம்முடைய பங்களிப்பு இருக்கும்.

ஆக, எதற்காக தூதர் அனுப்பப்பட்டாரோ அந்த நோக்கத்திற்காக இந்தக் கூட்டத்தை நாம் அதிகரிப்பதில் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் அதற்கான பலனையும் இறைவன் நமக்குக் கொடுப்பான். மேலும் இந்த உண்மையான பெருநாளில், ஒரு சாதாரண பெருநாளில் கிடைக்கின்ற பலனை விட மகிழ்ச்சியை விட அதிகமான மகிழ்ச்சியை இறைவன் வழங்குவான். இதன் மூலம் இங்கு செலவு மட்டும் செய்யப்படவில்லை. மாறாக, அனைத்து விதமான பலனும் கிடைக்கிறது. ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்து காலத்தின் இந்தப் பெரிய பெருநாளிலிருந்து பங்கு பெறக்கூடிய நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலம் எதுவென்றால் இஸ்லாத்தை அனைத்து உலகத்தின் மீதும் வெற்றி பெறச் செய்து மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அன்னாரின் ஜமாஅத்தின் மூலம் பரவச் செய்து அனைத்து உலகத்தையும் ஒரே இடத்தில் ஒன்று திரட்டுவது தான் அன்னாரின் காலமாகும். அந்நேரம் தான் நமக்கு உண்மையான பெருநாளாக அமையும் – இன்ஷா அல்லாஹ்.

எதுவரை அந்தப் பெருநாள் இல்லையோ அதுவரை இந்தப் பெருநாட்களின் மூலம் நாம் மகிழ்ச்சி அடைய முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைப்பதற்கான வாக்குறுதியையும் அன்னார் நம்மிடத்தில் வாங்கியுள்ளார்கள். ஆகவே நாம் இதற்கான முயற்சியைச் செய்வது அவசியமாகும்.

இன்று உலகம் அல்லாஹு அக்பர் என்ற முழக்கத்தினால் அச்சத்திற்குள்ளாகி இருக்கின்றது. ஏனென்றால் ஒரு சில முஸ்லிம்களின் செயல்களினால் அல்லாஹு அக்பர் மற்றும் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு என்ற ஓசையைக் கேட்டாலே உலகம் பதற்றம் அடைகிறது. ஆனால் நம்முடைய பணியானது இந்த அன்பான வார்த்தைகளின் உண்மைத்துவத்தை உலகின் மீது எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்றால் ஒவ்வொரு சமுதாய மக்களும் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு என்று கூறுவதிலும் அதையே வழக்கப்படுத்துவதிலும் மன நிறைவை உணர வேண்டும். மகிழ்ச்சியை உணர வேண்டும்.

அனைத்து உலகமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசுவதற்குப் பதிலாக அன்னார் மீது தரூது ஓதுவதில் மகிழ்ச்சியை உணர வேண்டும். இறைவனை தவறாகக் கூறுவதற்குப் பதில் அல்லாஹு அக்பர் என்ற முழக்கத்தையே முழங்க வேண்டும்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 1 பக்கம் 31–33, குத்பாத்தே ஈத் 2 ஆகஸ்டு 1916 அன்று ஆற்றியது)

கடந்த நாட்களில் ஜெர்மனியில் ஒரு முஸ்லிம், அவர் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்த தன் நண்பரைக் கண்ட மகிழ்ச்சியில் உரத்த குரலில் அல்லாஹு அக்பர் என்று கூறியதனால் காவல்துறை அவரை தீவிரவாதி என்று எண்ணி கைது செய்து விட்டது. ஆக, இந்த அச்சத்தை நீக்குவது மட்டுமே நம்முடைய பணி அல்ல. மாறாக ஜெர்மனியாகட்டும்; ஆங்கிலேயராகட்டும்; ஐரோப்பாவின் பிற நாடுகளிலுள்ள மக்களாக இருந்தாலும் சரி அமெரிக்காவைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி உலகில் எந்த நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே. அல்லாஹு அக்பர் என்று கூறுவதில் அவர் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

இதற்கான முயற்சியை நாம் செய்ய வேண்டும். அப்போதுதான் நமக்கு உண்மையான பெருநாளாக இருக்கும். மேலும் இது ஒருநாள்

கண்டிப்பாக நடக்கும் – இன்ஷா அல்லாஹ். அதாவது அனைத்து உலக மக்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவார்கள். இது நிச்சயமாக நடக்கும். இவ்விஷயங்கள் ஏதோவொரு பைத்தியக்காரனின் கனவு அல்ல. இது ஒரு குழந்தையின் சிந்தனையும் அல்ல. மாறாக, அல்லாஹ்வுடைய வாக்குறுதியின் விளைவாகும். இது ஒருநாள் கண்டிப்பாக முழுமை அடைந்தே தீரும் – இன்ஷா அல்லாஹ். இது அவனுடைய வாக்குறுதியாகும்.

كَتَبَ اللّٰهُ لَاَغۡلِبَنَّ اَنَا وَ رُسُلِیۡ ؕ اِنَّ اللّٰهَ قَوِیٌّ عَزِیۡزٌ

நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். (58:22)

இது நிறைவேறக்கூடிய இறை நியதியாகும். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் புகழ் உலகத்தில் பரவ வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலமாக உண்மையான பெருநாளின் மகிழ்ச்சி உம்மத்தினருக்குக் கிடைக்க வேண்டும். அதற்காக நம்மில் ஒவ்வொருவரும் நம்முடைய தகுதிக்கேற்ப தப்லீகிற்கான முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம்தான் அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ள அந்த ஒன்று கூடுதலை நாம் காண முடியும்.

அல்லாஹ் இந்த வாக்குறுதிக்கேற்ப நம்முடைய முயற்சிக்கும் அப்பாற்பட்டு தற்போது நமக்கு பலன்கள் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இணை வைப்பவர்களும் ஏகத்துவத்தின் அரவணைப்பில் வருகின்றார்கள். ஆனாலும் நாம் இன்னும் இதில் துரிதமாகச் செயல்பட வேண்டியது அவசியமாகும். ஆப்பிரிக்காவிலிருந்து எண்ணற்ற கடிதங்கள் வருகின்றன. அதில் முஷ்ரிக் ஆக – இணை வைப்பவர்களாக இருந்தவர்கள் தற்போது பைஅத் செய்து லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறத் தொடங்கி விட்டனர். அல்லது சில முதியவர்கள் இருந்தனர். அவர்களுக்கு கிறித்தவத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டதன் காரணத்தால் அவர்கள் இணை வைப்பவர்களாக ஆகி விட்டார்கள். சிலையை வணங்கத் தொடங்கி விட்டனர். அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி அவர்களுக்கு எட்ட வைக்கப்பட்டது.

அதைக் கேட்ட அவர்களில் ஒருவர், நான் மரணத்தின் இறுதியை நெருங்கி விட்டேன். நான் மார்க்கத்தை விட்டு மாறுவது மிகவும் கடினமான ஒரு விஷயமாகும். ஆனால் இந்த தூதுச் செய்தி உண்மையானதாகும். இதுவே உண்மையான ஏகத்துவம் ஆகும். நிச்சயமாக உங்களுடைய தூதுச் செய்தியில் எனக்கு உண்மை தெரிகின்றது. மேலும் என்னுடைய குழந்தைகள் இந்தத் தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். மேலும் பின்னால் வரக்கூடிய என்னுடைய சந்ததிகள் இந்த ஏகத்துவத்தின் மீது நிலைத்து நிற்க வேண்டும் என்பதே என்னுடைய துஆ ஆகும்.

இந்தப் புரட்சியையும் அல்லாஹ்தான் ஏற்படுத்துகின்றான். ஆனால் இதற்காக நாம் முன்பை விட அதிகமான முயற்சி செய்ய வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் நம்முடைய உள்ளங்களிலிருந்து உலகத்தின் மீதுள்ள பற்றை அகற்றுவானாக. மேலும் இறைவனின் நேசத்தை நம்முடைய உள்ளங்களில் குடிபெறச் செய்வானாக. இறைவனின் மார்க்கம் இறைவனின் மேன்மை மற்றும் இறைவனுடைய மகத்துவத்தை உலகில் பரப்புவதற்கான பாக்கியத்தை தந்தருள்வானாக.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் அந்தஸ்தை நாம் உலகிற்கு எடுத்துக் கூறுபவர்களாக ஆகுவோமாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய பாக்கியத்தை நமக்கு தந்தருள்வானாக. நம்முடைய உள்ளங்களையும் அல்லாஹ் அவனுடைய நேசத்தைக் கொண்டு நிரப்புவானாக. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூலான அல் வஸிய்யத்தில் கூறிய இந்த அறிவுரையின்படி நல்ல அமல் செய்யக்கூடியவர்களாக ஆகுவோமாக.

ஆசியா ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து, தனது அடியார்களை ஒரு மார்க்கத்தில் ஒன்று சேர்க்க விரும்புகிறான். இதுவே இறைவனின் நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்காக நான் உலகில் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை, நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

(அல் வஸிய்யத் ரூஹானி கஸாயீன் தொகுதி 20 பக்கம் 306–307)

நம்முடைய செயல் வடிவிலான முன்மாதிரியைக் கொண்டும் அல்லாஹ் நமக்கு அன்னாரின் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அன்னாரின் உதவியாளராக ஆக்குவானாக. இஸ்லாத்தின் வெற்றி மற்றும் ஏகத்துவத்தின் மீது உலகத்தை ஒன்று கூட்டுவதில் நாம் உண்மையான பெருநாளின் மகிழ்ச்சியைக் கொண்டாடுபவர்களாக ஆகுவோமாக. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு விதிக்கப்பட்ட அந்தப் பெருநாளைக் காண்பவர்களாக ஆகுவோமாக.

இதற்குப் பிறகு நாம் துஆ செய்வோம். அதற்கு முன்னால் உங்களுக்கும் உலகத்திலுள்ள அனைத்து அஹ்மதிகளுக்கும் பெருநாள் வாழ்த்துக்கள் கூறுகின்றேன். துஆவில் பல இடங்களில் மிகவும் கடினமான இன்னல்களின் சூழ்நிலையினால் இறைவழியில் கைதிகளாக இருப்பவர்களை நினைவு கூறுங்கள்.

ஷஹீதுகளின் மனைவி மக்களையும் துஆவில் நினைவு கூறுங்கள். ஜமாஅத்தின் தொண்டர்கள் மற்றும் (வாகிஃபீனே ஸிந்தகி) வாழ்வை அர்ப்பணித்தவர்களையும் துஆவில் நினைவு கூறுங்கள். உலகின் பல இடங்களில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற கடமையைச் செய்கின்ற முபல்லிகீன்களையும் துஆவில் நினைவு கூறுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு தைரியத்தை உருவாக்குவானாக. அவர்களில் விசுவாசத்தையும் ஏற்படுத்துவானாக. அவர்களுக்கு முன்பை விட அதிகமான மன எழுச்சியை வழங்குவானாக. எங்கு அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்களோ அங்குள்ள அனைத்து நபர்களுக்கும் ஏகத்துவத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கக்கூடியவர்களாக அவர்களை ஆக்குவானாக.

அனைத்து அஹ்மதிகளுக்காகவும் பொதுவாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அனைவரையும் தன்னுடைய பாதுகாப்பில் வைப்பானாக. பொறாமைக்காரர்களின் பொறாமையிலிருந்து தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பானாக.

முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக அவர்களை ஆக்குவானாக. தஜ்ஜாலிய காட்டில் சிக்கிக் கொண்டவர்கள் அதிலிருந்து வெளியேறட்டுமாக. அவர்கள் தொலைத்த நற்பாக்கியத்தை மீண்டும் நிலைபெறச் செய்யட்டுமாக.

......☆......☆......☆......

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

மவ்லவிகள் எதிர்ப்பதற்காக வந்தார்கள். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அந்த ஊரின் தலைவர் மற்றும் மேயர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். மேலும் இந்த வருடம் அங்குள்ள ஜமாஅத் பள்ளிவாசலையும் கட்ட இருக்கின்றது. மேலும் இந்த மவ்லவிகளின் பேச்சைக் கேட்டு எதிர்ப்பைத் தெரிவித்தவர்களும் கூட இப்போது அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள்.

♦ லாயிபீரியாவின் முபல்லிக் எழுதுகின்றார்கள்: தப்லீக் சுற்றுப் பயணத்தின்போது கேப் மவுண்ட் என்ற ஒரு ஊருக்கு சென்றோம். அங்கு தப்லீக் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அப்போது ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிமுகம் மற்றும் வருகையின் நோக்கம் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலும் கொடுக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் அந்த ஊரின் இமாம் ஃபவாத் குமாரா சாஹிப் அவர்கள் கூறினார்கள்: சில காலத்திற்கு முன்பு ஷியா அமைப்பைச் சார்ந்தவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக பொய்யான பிரச்சாரத்தை செய்தார்கள். அதாவது (அஹ்மதிகள்) ஹஸ்ரத் இமாம் ஹஸன் மற்றும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களை ஷஹீதாக்கினார்கள் என்று கூறினார்கள்.

இந்த ஊரைச் சார்ந்தவர்கள் படிப்பறிவு அல்லாதவர்களாக இருந்தார்கள். எனவே இந்த மவ்லவிகள், அஹ்மதிகள்தான் இமாம் ஹஸன் மற்றும் இமாம் ஹுஸைன் அவர்களை ஷஹீதாக்கினார்கள் என்று இவர்களை தூண்டி விட்டார்கள். நவூதுபில்லாஹ்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால் இன்று நீங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி செய்த அறிமுகத்தைக் கேட்டு, நாங்கள் அவர்களது பேச்சைக் கேட்டு எங்களை நாங்களே ஜமாஅத்தை விட்டு விலக்கி வைத்திருந்தோம் என்பதை எண்ணி நாங்கள் வருத்தப்படுகின்றோம். ஆனால் இன்று நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருப்பதாக அறிவிப்பு செய்கின்றோம்.

அல்லாஹ்வின் அருளால் அந்த ஊரில் மொத்தம் 195 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் பைஅத் செய்தனர். மேலும் ஜமாஅத்திலும் இணைந்து விட்டனர். ஆக இது மவ்லவிகளின் பிரச்சாரத்தினால் ஏற்பட்ட விளைவாகும். அல்லாஹ் இவர்களின் சூழ்ச்சியை எவ்வாறு உடைக்கின்றான்? அவர்களின் சூழ்ச்சியை அவர்களின் பக்கமே திருப்பி விடுகின்றான். ஆக அல்லாஹ்தான் இந்த ஒளியை பரப்புகின்றான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே நாங்கள் முழுமையான அகப்பார்வையுடன் இந்த விஷயத்தின் மீது ஈமான் கொண்டுள்ளோம். இந்த இயக்கம் அல்லாஹ்வினால் நிறுவப்பட்டதாகும். இந்த ஒளியை பரப்புவதன் பொறுப்பை அல்லாஹ் தானே ஏற்றுக் கொண்டுள்ளான். மேலும் அவன் பரப்பியும் வருகின்றான். எதிரிகள் எவ்வளவு எதிர்த்தாலும் இப்போது எவராலும் இதன் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது. இந்த அமைப்பு மலரும் மற்றும் பரவும். இன்ஷா அல்லாஹ். இது இறைவனின் நிலைத்திருக்கக்கூடிய முடிவாகும். அது முழுமையடைந்தே தீரும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது அல்லாஹ்வின் பேருபகாரமாகும். அவன் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கும் நமது பணி என்னவென்றால், நாம் நமது நிலைமைகளை சரிசெய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அவனே ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவான். நாம் அல்லாஹ்வின் இந்த முடிவிலிருந்து அருளிலிருந்து பங்கு பெற வேண்டுமென்றால் பிறகு நமது பங்கையும் நாம் செலுத்த வேண்டும். அது எவ்வாறு சாத்தியம் என்றால் நாம் தப்லீக்கின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் உங்களது இம்மை மற்றும் மறுமையை சரி செய்பவர்களாக நீங்கள் திகழ்கின்ற அதே வேளையில் உலகத்திற்கும் சரியான பாதையை காட்டக் கூடியவர்களாக திகழ்வீர்கள். அல்லாஹ்வின் அருளை ஈர்க்கக் கூடியவர்களாக திகழ்வீர்கள். அல்லாஹ் இதற்கான நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக. இப்போது துஆ செய்யுங்கள்.

துஆ செய்த பிறகு ஹுஸூர் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக கூறினார்கள்:

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹ். அறிக்கையின்படி ஹாலந்து ஜமாஅத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1576 ஆகும். இதில் 795 ஆண்கள். 781 பெண்கள் ஆவர். ஒட்டுமொத் எண்ணிக்கை 5839 ஆகும். இதில் 3495 ஆண்களும், 2344 பெண்களும் அடங்குவர். ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்கள் 132 நபர்கள் ஆவர்.

அல்லாஹ்வின் அருளால் அறிக்கைக்கேற்ப 17 நாடுகளைச் சார்ந்த உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். ஏறக்குறைய பாதிக்கும் மேற்பட்டவர்கள் வெளியிலிருந்து வருகை தந்த விருந்தாளிகள் ஆவர். இதன் காரணமாக இவர்களது மாநாடும் பொலிவுடன் நிறைவடைந்தது. ஜஸாகுமுல்லாஹ். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹூ.

இதற்குப் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஹாலந்து நாட்டின் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவைச் சார்ந்தவர்களும், குத்தாமுல் அஹ்மதிய்யாவைச் சார்ந்தவர்களும் ஒருவர் பின் ஒருவராக உருது மொழியில் நஸ்ம் படித்தார்கள். இதற்குப் பிறகு பெங்காலி மொழியில் ஒரு நஸ்ம் படிக்கப்பட்டது. இதற்குப் பிறகு அரபிகள் தமது குழுவுடன் இணைந்து அரபி மொழியில் தமது கவிதைகளை பாடினார்கள். இறுதியில் ஆப்ரிக்கா குழுவைச் சார்ந்தவர்கள் தமக்கே உரிய பாணியில் கலிமா தய்யிபாவை படித்தார்கள். பிறகு மிகவும் எழுச்சிமிக்க நாரே தக்பீர் முழக்கம் எழுப்பப்பட்டது.

இதற்குப் பிறகு 2.45 மணிக்கு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் உங்கள் இறைவனிடம் உதவிகோரியபோது, உங்கள் இறைவன் உங்களுக்கு அணி அணியாக தொடர்ந்து வரக்கூடிய ஆயிரக்கணக்கான வானவர்கள் மூலம் நான் உதவி செய்வேன் என்று (கூறிப்) பதிலளித்தான். (8:10)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

**29 செப்டம்பர் 2019 (ஞாயிற்றுக்கிழமை)**

**குடும்ப உறுப்பினர்களுடனான சந்திப்பு**

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 6 மணிக்கு ஹுஸூர் அவர்கள் தனது அலுவலகத்திலிருந்து வருகை தந்தார்கள். பிறகு குடும்ப உறுப்பினர்களுடனான சந்திப்பு நடைபெற்றது. மாலை நேரத்தின் இந்த நிகழ்ச்சியில் 29 குடும்பத்தைச் சார்ந்த 127 நபர்கள் தமது அன்பிற்குரிய தலைவரை சந்திப்பதற்கான நப்பேற்றைப் பெற்றார்கள். இதுமட்டுமின்றி 14 பெண்கள் தனிப்பட்ட முறையிலும், 113 ஜமாஅத் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையிலும் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கித்தைப் பெற்றார்கள்.

ஹுஸூர் அவர்களை சந்தித்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் தனிப்பட்ட உறுப்பினர்கள் ஹாலந்து நாட்டின் கீழ்க்கண்ட ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்

zwolle

Almere

Denbosh

zotermer

Aimsterdem

Den Haag

Maastricht

Rotterdam

Nunspeet

Arnhem

Eindhoven

Utrecht

Amstelveen

ஹுஸூர் அவர்களை சந்தித்த இந்த அனைத்து நபர்களும் தமது வாழ்க்கையில் முதல் முறையாக ஹுஸூர் அவர்களை சந்தித்தவர்கள் ஆவர். சில குடும்பங்களும் எப்படிப்பட்டதென்றால் இவர்களில் சில உறுப்பினர்கள் முதல் முறையாக ஹுஸூர் அவர்களை சந்திக்கின்றனர்.

**ஹுஸூர் அவர்களுடனான சந்திப்பிற்குப் பிறகு உறுப்பினர்களின் நற்தாக்கங்கள்**

♦ ஜன்ங் என்ற இடத்தைச் சார்ந்த முஹம்மது பஷீர் காமில் சாஹிப் அவர்கள் தமது தாக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

இறைவன் எனது அனைத்து விருப்பங்களையும் பூர்த்தி செய்து விட்டான். 2003 ஆம் ஆண்டு ஐந்தாவது கிலாஃபத்திற்கான தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரவு நீண்ட நேரம் ஆகிவிட்டது. அப்போது நான் எனது தந்தையிடம், அறிவிப்பு செய்யப்பட்டவுடனே என்னை எழுப்பி விடுங்கள் என்று கூறினேன்.

பிறகு எனது தந்தை என்னை எழுப்புவதற்காக வந்தபோது நான் எனது தந்தையிடம் கூறினேன். இப்போது நான் கனவில் கண்டேன். அதில் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் கலீஃபத்துல் மஸீஹ் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

இதற்குப் பிறகு சிறிது நேரத்தில் MTA விலும் அறிவிப்பு செய்யப்பட்டது.

அவர் கூறுகின்றார்: நான் தனியாக வெளியே வந்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு ஹுஸூர் அவர்களை சந்தித்தேன். அப்போது நான் குழந்தைகளுக்காக துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு ஹுஸூர் அவர்கள், கவலைப்படாதீர்கள். குழந்தைகள் வந்து விடுவார்கள் என்று கூறினார்கள்.

நான் ஹுஸூர் அவர்கள் சந்தித்து விட்டு அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபோது எனக்கு ஃபோன் வந்தது. உங்களது குழந்தைகள் வருவதற்கான கடிதம் வந்து விட்டது என்று கூறப்பட்டது.

எந்த அளவுக்கு மகத்துவத்துடன் ஹுஸூர் அவர்களின் வார்த்தை முழுமையானது. இது எனக்கு அற்புதத்தை விட குறைவானதல்ல. இன்று எனது குழந்தைகள் மற்றும் குடும்பத்துடன் ஹுஸூர் அவர்களுடனான சந்திப்பும் நடைபெற்று விட்டது. இன்று எங்களுக்கு இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாகும்.

♦ ஃபைஸலாபாதிலிருந்து வந்திருந்த ரிஸ்வான் மஹ்மூத் சாஹிப் என்ற இளைஞர் கூறுகின்றார்:

எனது வாழ்க்கையில் எனக்கு மிகப்பெரிய ஒரு விருப்பம் இருந்தது. அது இன்று நிறைவேறி விட்டது. எனது வாழ்க்கையில் இதைத்தவிர வேறு எதுவும் எனக்கு தேவையில்லை. இன்று எனக்கு எல்லாமே கிடைத்து விட்டது.

♦ நாரங் மண்டியைச் சார்ந்த இஜாஸ் மஹ்மூது சீமா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்று எனது உள்ளம் பரந்ததாக ஆகிவிட்டது. நான் மிகவும் நற்பேறு பெற்றவன் ஆவேன். ஹுஸூர் அவர்களுடனான எனது இந்த சந்திப்பானது எனது வாழ்க்கையில் எனக்கு கிடைத்து விலை மதிப்புமிக்க பொக்கிஷமாகும்.

♦ ஹானேவாலிலிருந்து வந்திருந்த அன்ஜும் நவீது சாஹிப் கூறுகின்றார்கள்:

என்னால் வார்த்தைகளால் கூற முடியாது. உணர்வுகளை வெளிப்படுத்துதுவது மிகவும் கடினமாகும். எனது ஒரு மிகப் பழமையான விருப்பம் நிறைவேறி விட்டது. நீண்ட ஆண்டுகளாக நான் செய்து வந்த துஆவை இறைவன் இன்று செவியேற்றுள்ளான். அன்பிற்குரிய தலைவரை சந்திக்கும் நற்பேறு கிடைத்து விட்டது. இதற்கு ஈடு வேறெதுவும் இல்லை.

♦ நன்கானாவிலிருந்து வந்திருந்த இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்கள் தனது உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்கள்:

நான் எனது குடும்பத்தில் காலத்தின் கலீஃபாவை சந்தித்த முதல் பேரன் ஆவேன். எனது குடும்பத்தில் எனக்கே இதற்குறிய நற்பாக்கியம் கிடைத்துள்ளது. எனது பெற்றோர்களும், முழு குடும்பமும், ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கியம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் தொழுகையை (முறைப்படி) நிலைநாட்டுவர். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவு செய்வர். உண்மையான நம்பிக்கையாளர்கள் அவர்களே. அவர்களுக்கு அவர்களின் இறைவனிடம் (உயர்) பதவியும், மன்னிப்பும், கண்ணியமான உணவும் உள்ளன. (8:4,5)

A.Basheer Ahmad, Melapalayam

எனக்கு கிடைக்க வேண்டும் என்று எனக்காக துஆ செய்தது. இன்று பாகிஸ்தானில் இருக்கின்ற எனது குடுத்தைச் சார்ந்தவர்களின் மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையே இல்லை.

♦ ஃபைஸிலாபாதிலிருந்து வந்திருந்த முஹம்மது யாஸிர் சாஹிப் என்ற இளைஞர் கூறுகின்றார்:

இன்று எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியாக இருக்கின்றது. பாகிஸ்தானில் MTA வில் ஹுஸூர் அவர்களை பார்த்து வந்தேன். மேலும் எனது வாழ்க்கையில் அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களை சந்திக்கும் நற்பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று துஆ செய்து வந்தேன். இறைவன் இன்று எனது துஆவை செவியேற்று விட்டான். ஹுஸூர் அவர்கள் எனது கையை பிடித்து வைத்திருந்தார்கள். மேலும் நான் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டேன்.

♦ குஜ்ரான்வாலாவிலிருந்து வந்திருந்த உஸ்மான் அலி சாஹிப் அவர்கள் தனது உணர்வுகளை பற்றி கூறுகின்றார்கள்:

எனது உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. எனது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. நான் ஹுஸூர் அவர்களுடன் உரையாட முயற்சி செய்தேன். என்னால் பேச முடியவில்லை. இன்று நான் மிகவும் நற்பேறு பெற்றவன் ஆவேன்.

♦ கராச்சியிலிருந்து வந்திருந்த உஸ்மான் அஹ்மது சாஹிப் என்ற இளைஞர் கூறுகின்றார்:

எங்களுக்கு எங்களது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான துடிப்பு இருந்தது. ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக நாங்கள் ஏங்கிக் கொண்டிருந்தோம். அல்லாஹ் எங்களது துஆக்களை செவியேற்று விட்டான். இன்று சந்திப்பதற்கான அந்த நற்பாக்கியமும் கிடைத்தது. அல்லாஹ்வின் அருளாகும். இறைவனுக்கு நன்றி. அல்லாஹ்வின் அருளின்றி இந்த நொடிப்பொழுது எவருக்கும் கிடைக்க முடியாது. இறைவன் ஹுஸூர் அவர்களின் நிழலை நீண்ட காலம் வரை நம்மீது வைத்திருப்பானாக. ஆமீன்

♦ முல்தானிலிருந்து வந்திருந்த அம்மார் முபஷ்ஷிர் சாஹிப் என்ற இளைஞர் கூறுகின்றார்:

இப்போது உணர்வுகளினால் எனது நிலை என்னவென்றால், ஒரு வார்த்தை கூட என் நாவிலிருந்து வெளி வர முடியவில்லை. வாழ்க்கையில் முதல் முறை காலத்தின் கலீஃபாவை இவ்வளவு அருகில் பார்த்தேன். என்னால் பேச முடியவில்லை. நான் மிகவும் கஷ்டப்பட்டுதான் எனது பெற்றோர்களுக்காக துஆ செய்யுமாறு கூறினேன்.

♦ குஜ்ரான்வாலா மாவட்டத்தின் அலி பூர் சட்டா என்ற ஊரிலிருந்து வந்திருந்த நேபல் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னால் வார்த்தைகளால் கூற முடியாது. ஹுஸூர் அவர்களை சந்திக்க வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. எனது கனவு நிறைவேறி விட்டது. மேலும் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கியம் கிடைத்து விட்டது என்பதை இப்போது கூட என்னால் நம்ப முடியவில்லை. இது இறைவனின் குறிப்பான அருளாகும். இதற்காக நான் வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கு நன்றி செலுத்த முடியாது. இறைவன் ஹுஸூர் அவர்களின் நிழலை நம்மீது இடுவானாக. மேலும் ஹுஸூர் அவர்களின் ஒவ்வொரு வழிகாட்டலின்படியும் செயல்படக்கூடிய நற்பாக்கியத்தை நமக்கு வழங்குவானாக.

♦ ரப்வாவிலிருந்து வந்திருந்த முஹ்ஸின் ரிஸா சாஹிப் என்ற இளைஞர் கூறுகின்றார்:

என்னால் பேச முடியவில்லை. இன்று வாழ்க்கையில் மிகப்பெரிய விருப்பம் நிறைவேறி விட்டது. எனது உள்ளம் தற்போது மிகவும் வேகமாக துடிக்கின்றது. இன்று ஹுஸூர் அவர்களுடன் எனது சந்திப்பு நடைபெற்று விட்டது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. சந்திப்பானது என்னை மாற்றி விட்டது.

♦ ரப்வாவிலிருந்து வந்திருந்த ஹரம் ஷஹ்ஸாத் சாஹிப் கூறுகின்றார்:

நாங்கள் MTA வில் மாநாட்டுகளை பார்ப்போம். அதில் ஹுஸூர் அவர்கள் கலந்து கொள்வார்கள். நானும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும். ஹுஸூர் அவர்களை சந்திக்க வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தது. இறைவன் தனது அருளால் இன்று அதை நிறைவேற்றி விட்டான். எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த என்னிடம் சொற்கள் இல்லை. மாநாட்டிலும் கலந்து கொண்டேன். மேலும் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான நற்பாக்கியமும் கிடைத்து விட்டது. இதை விட இறைவனது வேறு எந்த மிகப்பெரிய அருட்கொடையும் கிடையாது.

♦ சர்கோதாவிலிருந்து வந்திருந்து மஸ்ஊது அம்ஜத் சாஹிப் என்ற இளைஞர் கூறுகின்றார்:

எனக்கு இருக்கின்ற நிலையைப் பற்றி ஒரு மனிதனால் அதைக் எடுத்துக் கூற முடியாது. எனக்கு ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கு மிகுந்த விருப்பம் இருந்தது. மேலும் நான் ஹுஸூர் அவர்களிடம், எனக்காக துஆ செய்யுங்கள். எனது வாழ்க்கையில் ஒரு நாள் நான் ஹுஸூர் அவர்களின் கரங்களை முத்தமிட வேண்டும் என்று துஆவிற்காக எழுதினேன். நான் இன்று உலகத்தின் மிகவும் நற்பேறு பெற்ற மனிதன் ஆவேன். ஹுஸூர் அவர்கள் எனது கையைப் பிடித்தார்கள். மேலும் நான் ஹுஸூர் அவர்களிடம் பேசினேன். மேலும் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டேன்.

♦ நன்கானாவிலிருந்து வந்திருந்த பாபர் இக்ரார் சாஹிப் கூறுகின்றார்கள்:

ஹுஸூர் அவர்களை சந்திக்க வேண்டும் என்று எனக்கு எந்த அளவுக்கு விருப்பம் இருந்தது என்பதை என்னால் எடுத்துக் கூற முடியாது. நான் ஜெர்மனி ஆண்டு மாநாட்டிற்கு சென்றதே ஹுஸூர் அவர்களின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான். ஹுஸூர் அவர்களின் முகத்தை நான் பார்த்தபோது என்னையே அறியாமல் 'மாஷா அல்லாஹ்' என்று எனது நாவிலிருந்து வந்தது. இன்று அல்லாஹ் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான விருப்பத்தை நிறைவேற்றி விட்டான். நான் மிகவும் அருகில் இருந்தவாறு ஹுஸூர் அவர்களை சந்தித்தேன். நான் இன்று எத்தகைய நற்பேறு பெற்றவனாக இருக்கின்றேன்.

(உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

## திருக்குர்ஆனிலிருந்து...

(தங்கள் முன்) அல்லாஹ்(வின் பெயர்) நினைவு கூரப்படும்போது, உள்ளங்கள் நடுங்குபவர்களே (உண்மையான) நம்பிக்கை கொண்டவர்களாவர். அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதப்படும்போது அவை அவர்களின் நம்பிக்கையினை வளரச் செய்கிறது. (மேலும்) அவர்கள் தங்கள் இவைனிடமே நம்பிக்கை வைப்பார்கள். (8:3)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 18 June 2020 Issue No. 25

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

♦ கேம்பியாவின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் எங்களுக்கு யூரோ ஜோலா என்ற ஊரில் ஓர் அழகான பள்ளிவாசலை கட்டுவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. இதற்குப் பிறகு இந்த ஊருக்கு முல்லாக்கள் வர ஆரம்பித்து விட்டனர். மேலும் அஹ்மதிகளிடம், அஹ்மதிய்யத்தை விட்டு விட வேண்டும் என்றும் பள்ளிவாசலை விட்டு விட வேண்டும் என்றும் மிரட்டல் விடுகின்றனர். ஏனென்றால் அஹ்மதிகள் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆவர். மேலும் அவர்களில் எவரேனும் மரணித்து விட்டால் அவர்களை அடக்கம் செய்ய விட மாட்டோம் என்றும் கூறி வந்தனர்.

ஒரு படிப்பறிவற்ற அஹ்மதி பெண் அந்த முல்லாவிடம், அஹ்மதிகள் இந்த பள்ளிவாசலில் தொழுகையின்போது திருக்குர்ஆனின் சூரா ஃபாத்திஹாவை ஓதக் கூடாதா?... அதில் எவ்வித வேறுபாடும் இல்லையென்றால் பிறகு நாங்கள் ஏன் அஹ்மதிய்யத்தை விட்டு விட வேண்டும்? மேலும் ஏன் அஹ்மதிகளின் பள்ளிவாசலை விட்டு விட வேண்டும்? நாங்கள் அஹ்மதிகள் ஆவோம். மேலும் அஹ்மதிகளாகவே இருப்போம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்.

♦ கான்கோவின் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வருடம் பகடா நகரத்தில் ஜமாஅத் சென்டர் நிறுவப்பட்டது. ஜமாஅத்தின் அமைப்பு மற்றும் போதனைகளைப் பார்த்து பெரும்பான்மையான முஸ்லிம்கள் அஹ்மதிகளாயினர். இதன் காரணமாக அங்கு ஜமாஅத்திற்கு கடுமையான எதிர்ப்பு ஆரம்பமாகியது. மேலும் நமது முஅல்லிமிற்கு மிரட்டல் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் அரசாங்கத்தின் துறைகளிலும் பொய்யான அறிக்கைகள் கொடுக்கப்பட்டன. புதிய அஹ்மதிகள் அஹ்மதிய்யத்தை விட்டு விட வேண்டும் என்று கூறப்பட்டு வந்தது.

அல்லாஹ்வின் அருளால் இந்த எதிர்ப்புக்குப் பிறகும் அனைவரும் நிலைத்து நின்றனர். மேலும் இந்த எதிரிகளிடம், நாங்கள் பல வருடங்களாக அஹ்மதிகளாக இருந்தோம். நீங்கள் எங்களிடம் ஒருபோதும் வந்தது கிடையாது. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் எங்களுக்கு உண்மையான இஸ்லாத்தை கற்றுக் கொடுக்கின்றபோது நீங்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றீர்கள். இப்போது நாங்கள் அஹ்மதி முஸ்லிம்களாவோம். இன்ஷா அல்லாஹ் இதிலேயே நாங்கள் நிலைத்திருப்போம் என்று கூறினர்.

♦ பெனின் நாட்டிலுள்ள பாராகோவிலிருந்து முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இவர்களது மண்டலத்தின் ரஹ்மான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டபோது மிகவும் ஏழையாக இருந்தேன். வெறும் இரண்டு நேர உணவே கிடைத்து வந்தது. மல்லவிமார்கள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் நான் எனது குடும்பத்துடன் அஹ்மதிய்யத்தில் நிலைத்து நின்றேன். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் காரணமாக சந்தா செலுத்தவதன் பக்கம் எந்த அளவுக்கு பழக்கம் ஏற்பட்டது என்றால் குறைவாக இருந்தாலும் சரி; அதிகமாக இருந்தாலும் சரி ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக சந்தா செலுத்தி வந்தேன்.

இப்போது எனது வயலில் முன்பை விட அதிகமான விளைச்சல் ஏற்பட்டுள்ளது. இப்போது என்னிடம் இரு சக்கர வாகனமும் உள்ளது. மேலும் வீடும் இருக்கின்றது. நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்! அஹ்மதிய்யத்தின் அருளின் காரணமாக அல்லாஹ் என்மீது அருள் பொழிந்துள்ளான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பிறகு எதிரிகளின் எதிர்ப்பின் காரணமாகவும் ஒவ்வொரு இடங்களிலும் பைஅத் நடைபெறுவதை பார்க்க முடிகின்றது. ஒன்றிரண்டு சம்பவங்களை எடுத்துக் கூறுகின்றேன்.

♦ மாலி மண்டலத்தின் லேகோரோ என்ற ஊரைச் சார்ந்த அப்துல் சலாம் சாஹிப் கூறுகின்றார்கள்:

முதல் முறையாக அவர்களுக்கு ரேடியோ மூலம் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்தது. அப்போது அவர்கள் ஓர் அஹ்மதியின் வீட்டில் இருந்தார்கள். பிறகு அவர்களுக்கென்று ஒரு ரேடியோவை அவர்கள் விலைக்கு வாங்கினார்கள். அந்த நாளிலிருந்து இன்று வரை அவர்கள் ஜமாஅத் ரேடியோவைத் தவிர வேறு ரேடியோவைக் கேட்டது கிடையாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ரேடியோவில் வருகின்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் அவர்கள் கேட்கின்றார்கள். மேலும் வீட்டிலுள்ளவர்களையும் கேட்கச் செய்கின்றார்கள்.

அல்லாஹ்வின் அருளால் இவர்களது ஊரில் ஜமாஅத் மிகவும் வலுவடைந்து விட்டது. கடந்த ஆண்டுகளில் ஊரிலுள்ள இமாம் மற்றும் மற்ற மவ்லவிகளின் பேச்சைக் கேட்டு அந்த ஊர் மக்கள் எதிர்த்து வந்தார்கள். மேலும் அஹ்மதிகளை பள்ளிவாசலுக்கு வருவதிலிருந்து தடுத்தார்கள்.

எனவே அப்போது அந்த ஊரைச் சார்ந்த ஓர் அஹ்மதியிடம் அங்கு நிலம் இருந்தது. அதை உடனடியாக ஜமாஅத் பெயருக்கு மாற்றி விட்டார். இதற்குப் பிறகு ஜமாஅத் நாலா புறமும் சுவர்களை எழுப்பியது. பரந்த வெளியில் தொழுகையையும் ஆரம்பித்தார்கள். இந்த எதிர்ப்பிற்குப் பிறகு அந்த ஊரின் தலைவர் மற்றும் மேயர் மற்றும் இதர குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என ஒட்டுமொத்தமாக 210 நபர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad